

நயினாதீவு 3 ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்

2ம் ஒழுங்கை இல 21/21 கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கை

வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் குலசேகரம் செல்லம்மா

அவர்களின் இறைபதப் பேறு குறித்த

# நினைவு மலர்



## 23.09.2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



நயினாதீவு 3 ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்

இல 21/21 கலாசாலை வீதி, 2ம் ஒழுங்கை

திருநெல்வேலி வடக்கை வதிவிடமாகவும் கொண்ட

அமரத்துவமடைந்த எங்கள் குடும்பத்தலைவியும்

பாசமிகு அன்னையுமாகிய

# அமரர் குலசேகரம் செல்லம்மா

அவர்களின் இறைபதப் பேறு குறித்த

# "நினைவு மலர்"

## 23.09.2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

எங்கள் நெஞ்சங்களில்
பாச உள்ளங்களில் தெய்வமானாய்,
உன் நெஞ்சத்தை
தினம் தினம் எண்ணி எண்ணி
நாம் சுமை தாங்கி ஆகின்றோம்.
விட்டுச் சென்ற நினைவுகளை
பாச உறவுகளை நித்தம் நித்தம்
நினைந்து கண்ணீர் சொரிகின்றோம்
குடும்பத்திற்காய் உன்னை உருக்கி
எங்களை தலை நிமிர வைத்தாய்
உன் உயர்ந்த தியாகத்தை
வரலாற்று ஏட்டில் பொறிப்போம்
உந்தன் பாதச் சுவடுகளில்
நினைவு மலரை
எம் கண்ணீருடன் கலந்து
உன் பாதக் கமலத்தில்
சமர்ப்பணம் செய்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்னையாய் இருந்து அனைத்துமே தந்து
தன்னையே உருக்கிய தாயடி சரணம்"



மலர்வு
10.03.1919

உதிர்வு
24.08.2020

# அமரர் குலசேகரம் செல்லம்மா
## (முத்தாச்சி)

அவர்களின்

தேகவியோகம் குறித்த

## திதி நிருணய வெண்பா

ஆண்டு சார்வரி ஆவணியீர் நாலு திங்கள்
பூண்டதிதி பூர்வத்துச் சஷ்டியே - நீண்டகவை
முத்தான செல்லம்மா முதுகனியாய் நயினையுறை
சத்தியருட் பதமடைந்தாள் சாற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிரு திருமுறை



**விநாயகர் துதி**

முன்னவனே; யானை முகத்தவனே! முத்திநலம்
சொன்னவனே; தூய்மைச் சுகத்தவனே மன்னவனே
சிற்பரனே ஐங்கரனே! செஞ்சடையஞ் சேவகனே
தற்பரனே நின்தாள் சரண்

*திருச்சிற்றம்பலம்*

## தேவாரம்

**முதலாம் திருமுறை** **அருளியவர்:- திருஞானசம்பந்தர்**

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந்திட் டைம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்
றருள் செய்வா னமருங்கோயில்
வலம்வந்த மடவார்க ணடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில் பார்க்குந் திருவையாறே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரண்டாம் திருமுறை** **அருளியவர்:- திருஞானசம்பந்தர்**

தொண்ட ரஞ்சுகளிறு மடக்கிச் சுரும்பார் மலர்
இண்டை கட்டி வழிபாடு செய்யுமிட மென்பரால்
வண்டுபாட மயிலாலமான் கன்று துள்ளவரிக்
கெண்டை பாயச்சுனை நீலமொட்டலருங் கேதாரமே

**மூன்றாந் திருமுறை** **அருளியவர்:- திருஞானசம்பந்தர்**

மண்ணினல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல் லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் ல.்.துறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே

**நான்காம் திருமுறை** **அருளியவர்:- திருஞானசம்பந்தர்**

கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் திரிந்துன்ற னாமம் பயின்றே னுன தருளால்
திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா திரிப்புலி யூரானே

**ஐந்தாம் திருமுறை** **அருளியவர்:- திருநாவுக்கரசர்**

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே

**ஆறாம் திருமுறை** **அருளியவர்:- திருநாவுக்கரசர்**

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
 தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவா ரவர்செல்வ மதிப்போ மல்லோ
 மாதேவர்க் கேகாந்த ரல்லா ராகில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கமெலாங் குறைந்ததழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் நாம் வணங்குங் கடவுளாரே

**ஏழாம் திருமுறை** **அருளியவர்:- சுந்தரமூர்த்திநாயனார்**

மீளாவடிமை யுமக்கே யாளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போ லுள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளாயிருக்கு மடியார் தங்களல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே

**எட்டாம் திருமுறை** **அருளியவர்:- மாணிக்கவாசகர்**

இணையவர் திருவடி என்றலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள் அத்தனையுந் துறந்தொழிந்தேன்
அணையார் புனற்றில்லை அம்பலத்தே ஆடுகின்ற
புனையாளன் சீர்பாடிப் பூவல்லி கொய்யாமோ

**ஒன்பதாம் திருமுறை** **அருளியவர்:- கருவூர்த்தேவர்**

கலைகடம் பொருளு மறிவுமா யென்னைக்
கற்பினிற் பெற்றெடுத் தெனக்கே
முலைகடந் தருளுந் தாயினு நல்ல
முக்கணா னுறைவிடம் போலும்
மலைகுடைந் தனைய நெடுநிலை மாட
மருங்கெலாம் மறையவர் முறையோத
அலைகடல் முழங்கும் அந்தணீர்க் களந்தை
அணிதிக ழாதிதேச் சரமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

அருளியவர்:- சேந்தனார்

நிட்டையி லாவுட னீத்தென்னை யாண்ட
நிகரிலா வண்ணங்களுஞ்
சிட்டன் சிவனடி யாரைச்சீ ராட்டுந்
திறங்களுமே சிந்தித்து
அட்டமூர்த் திக்கென் னகநெக வூறு
மமிர்தினுக் காலநிழற்
பட்டனுக் கென்னைத்தன் பாற்படுத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருமந்திரம்

பத்தாம் திருமுறை அருளியவர்:- திருமூலர்

தாரமு மாகுவள் தத்துவ மாய்நிற்பள்
காரண காரிய மாகுங் கலப்பினள்
பூரண விந்து பொதிந்த புராதனி
பாரள வாந்திசை பத்துடை யாளே

ஊரெலாங் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே

அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டார்
இடப்பக்க மேயிறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந்தாரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டுத் தடவித் துடிப்பொன்றும் காணாது
பெட்டப் பிணமென்று பேரிட்டுக் கட்டி
எடுங்களத்தா என்னாமுன் ஏழை மடநெஞ்சே
நெடுங்களத்தான் பாதம் நினை

*- நம்பியாண்டார் நம்பி*

பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்
துறவியெனுந் தோற்றோணி கண்டீர் - நிறையுலகில்
பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
தன்மாலை ஞானத் தமிழ்

*- காரைக்காலம்மையார்*

இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரும் நெறிபணியா ரேனும் - சுடருருவில்
என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்
கன்பறா தென்னெஞ் சவர்க்கு

*- பட்டினத்தார்*

ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் - செய்யஇரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேன் இனி ?

வீற்றிருந்தாள் அன்னை வீதி தனில் இருந்தாள்
நேற்றிருந்தாள் இன்று வெந்து நீறானாள் - பால் தெளிக்க
எல்லீரும் வாருங்கள் ஏதென்று இரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்

நன்மைபெரு கருள்நெறியே வந்தணைந்து நல்லூரில்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கி மகிழ்ந் தெழும்போதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர் தம்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினார் சிவபெருமான்

இறவாத இன்பஅன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
- உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும்போதுன் னடியின்கீழ் இருக்க என்றார்.

## அபிராமி அந்தாதி

*- அபிராமிப்பட்டர்*

அரணம் பொருளென் றருளொன் றிலாத வசுரர் தங்கள்
முரணன் றழிய முனித்தபெம் மானு முகுந்தனுமே
சரணஞ் சரண மெனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி யிரண்டு மெய் தாரிந்த வையகத்தே

குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவியெங் கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுகும் அப்போது வளைக்கை அமைத்து
அரம்பை அடுத்த அரிவையர் சூழவந் (து) அஞ்சல் என்பாய்
நரம்பை அடுத்த இசைவடி வாய் நின்ற நாயகியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ் – *அருணகிரிநாதர்*

இருவினைக ளீட்டு மிழவுபடு கூட்டை
யெடுமெடென வீட்டி லனைவோரும்
இறுதியிடு காட்டி லழுதுதலை மாட்டி
லெரியளரி மூட்டி யிடுமாறு
கரியஇரு கோட்டு முரணெருமை மோட்டர்
கயிறிறுக மாட்டி யழையாமுன்
கனகமணி வாட்டு மருவுகழல் பூட்டு
கழலிணைகள் காட்டி யருள்வாயே
பருவமலை நாட்டு மருவுகிளி யோட்டு
பழையகுற வாட்டி மணவாளா
பகைஞர்படை வீட்டில் முதியகன லூட்டு
பகருநுதல் நாட்ட குமரேசா
அருமறைகள் கூட்டி யுரைசெய்தமிழ் பாட்டை
அடைவடைவு கேட்ட முருகோனே
அலைகடலி லீட்ட அவுணர்தமை யோட்டி
அமரர்சிறை மீட்ட பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

*திருச்சிற்றம்பலம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி. குலசேகரம் செல்லம்மா அவர்களின் வாழ்வுப் பாதை

ஈழமணித்திரு நாட்டின் சிகரமாக இலங்குமெழில் யாழ்ப்பாண நகரின் தென்மேல் சூழவுள்ள எழுதீவுக் கூட்டந் தன்னில் சுடரொளியாய் விளங்கும் அருட்பொலிவும் ஆன்மீகச் சிறப்பும் வரலாற்றுப் புகழும் மிக்க நயினாதீவில் திண்ணைப்பள்ளி ஆசான் எனச் சிறப்புற்ற வேலாயுதர் மரபில் தோன்றிய வைரமுத்து முத்துப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகனார் காத்தார் என அழைக்கப்படும் வைத்திலிங்கம் நாகமுத்து தம்பதியரின் இல்லறப் பேறின் பயனாய் பட்டிவாசல் என்னும் பதியில் 1919ம் ஆண்டு பங்குனித் திங்கள் 10ம் திகதி செல்லம்மா என்பவர் பிறந்தார். இவரது சகோதரர்களாக சிதம்பரம், சின்னம்மா, சொர்ணலிங்கம், குகதாசன், ஆகியோர் பிறந்தனர். வீட்டின் சூழ்நிலைகள் காரணமாக செல்லம்மா அவர்கள் 8ம் வகுப்பு வரையே கற்றார். பெற்றோருக்கு உறுதுணையாக விவசாயச் செய்கையில் ஈடுபட்டார்.

இவர் 1948ம் ஆண்டு ஆவணி மாதம் 20ம் திகதி நயினாதீவு வடக்கு, வேலாயுதம் சின்னத்தங்கம் தம்பதியரின் இளைய மகனான ஆசிரியர் குலசேகரம் அவர்களைத் திருமணம் புரிந்து இரு மனமொத்த இல்லற வாழ்வின் பயனாய் செல்வமலர், ஞானமலர், வசந்தமலர், என்கின்ற மூன்று மலர்கள் உதித்தன. பிள்ளைகள் மூவரையும் கல்விகேள்விகளில் சிறப்புற வைத்து செல்வமலர் என்பவருக்கு தந்தை வழி மைத்துனர் எழுதுனர் ஏகாம்பரநாதன் என்பவரைத் திருமணம் செய்து வைத்தார். இவர்களின் இல்லறத்தில் காலஞ்சென்ற சுதமதி மற்றும் சங்கர், யோகர், சேகர், சுதாகர், என ஐந்து பிள்ளைகளும், ஞானமலர் என்பவருக்கு இரத்தினசிங்கம் என்பவரைத் திருமணம் செய்து வைத்து இவர்களுக்கு வசீகரன், மேனஜா என்கின்ற இரண்டு பிள்ளைகளும், வசந்தமலர் என்பவருக்கு விஜயகுமார் என்பவரைத் திருமணம் செய்து வைத்து அனித்தா, இராகுலன், பிரவீன், என்கின்ற மூன்று பிள்ளைகளும் உள்ளனர். குலசேககரம் செல்லம்மா தம்பதியினர் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வரும் நாளில் இல்லறமாகிய நல்லறந் தன்னில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பத்தினான்கு வருடங்கள் கடந்த நிலையில் ஓய்வுபெற்ற அதிபராகிய ஆருயிர்க் கணவரை எதிர்பாரா விதமாக ஏற்பட்ட நோயினால் 1983.01.20ம் திகதி இழக்க நேரிட்டது.

கணவரை இழந்தும் கவலைகளை வெளிப்படுத்தாது பிள்ளைகளின் நல்வாழ்வுக்காக அயராது பாடுபட்டதுடன் பயிர்ச் செய்கைகளை மேற்கொண்டு கிடைக்கும் வருமானத்தினாலும் கணவரின் மூலம் கிடைத்த ஓய்வூதியத்தினாலும் பிள்ளைகள் மூவருக்கும் மனைகளமைத்து மனமிக மகிழ்ந்தார். 1990 தொடக்கம் 2005ம் ஆண்டுவரை தனது இரண்டாவது மகளார் ஞானமலர் இரத்தினசிங்கம் அவர்களுடன் நயினாதீவில் வசித்து வந்தார். பின்பு 2006 தொடக்கம் இறைபதம் எய்தும் வரை இவர் தனது செல்வமகளாகிய செல்வமலருடன் திருநெல்வேலியில் வசித்து வந்தார். மருகர் ஏகாம்பரநாதன் அவர்கள் இவரது கணவரின் சகோதரியின் மகனாகையால் இவருடனான பாசப்பிணைப்பு அளவிடற்கரியது.

இவரது மைத்துனர்களாக தர்மலிங்கம், பொன்னம்மபலம், விசாலாட்சி, செல்லம்மா ஆகியோரும் கணவர்வழி மைத்துனர்களாக கந்தையா, சின்னம்மா, நாகம்மா அன்னப்பிள்ளை, செல்லாச்சி, ஆகியோரும் வாய்க்கப்பெற்றனர். சம்பந்திகளாக நாகலிங்கம், கந்தையா, கந்தசாமி, ஆகியோர் திகழ்ந்தனர். பூட்டப்பிள்ளைகளாக சௌமியா, சாஜிதன், பிரபா, ஆர்த்தனா, ஆருரன், சச்சின், அமீலியா, மிலேஸ், றியா, நீறியா,றீனா ஆகியோர் வாய்த்தனர். இரண்டு பிள்ளைகளும் மருமக்களும், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் ஆகியோரும் வெளிநாடுகளில் வசித்து வந்தாலும் அடிக்கடி இங்கே வந்து அன்னாரின் பாசமழையில் நனைந்து செல்வர். பொல்லாக் கொடு நோயான "கொரோனா" இவர்களை அன்னாரின் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொள்ளத் தடை விதித்தாலும் அன்னாரின் நினைவுகளை நெஞ்சில் சுமந்தபடி ஆத்ம சாந்திக்காய் இறைவனைப் பிரார்த்தித்த வண்ணமே உள்ளனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த மகளாரின் இளைய மகன் சுதாகர் என்கின்ற பேரருடனும் பூட்டி ஆர்த்தனாவுடனும் அன்பு குழைந்து அக மகிழ்ந்திருந்தார்.

அன்னார் 2019ம் ஆண்டு தனது 100 வது பிறந்தநாளை பிள்ளைகள், மருமக்கள், பேரர்கள், பூட்டப் பிள்ளைகள், உற்றார் உறவினர், நண்பர்களுடன் இனிதே கொண்டாடி மகிழ்ந்தார். அன்னார் விவசாயச் செய்கையில் மேம்பட்டு விளங்கியதுடன் இரட்டங்காலி முருகன் ஆலயத்துக்குத் தெற்குப் புறமாகவுள்ள காணியை நயினாதீவுச் சுவாமியார் பரமாத்மானந்தா அவர்களுக்கு தியான மண்டபம் அமைப்பதற்காக தர்மசாதனம் செய்திருந்தார். என்பது குறிப்பிடற்பாலது.

தளராத உறுதியும், மாறாத வார்த்தையும், தடைகள் வாராத கொடையுமுடைய குலசேகரம் செல்லம்மா அவர்கள் தனது 101 அகவை தாண்டி 24.08.2020 அதிகாலை இறைபதம் எய்தினார் . அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவியைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரரின் தாயார் வைத்திலிங்கம் நாகமுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரரின் மாமனார் வேலாயுதமும்,
மாமியார் சின்னத்தங்கமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்கள்: செல்லம்மா, சொர்ணலிங்கம், குகதாசன், சிதம்பரம்
சின்னம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமரர் தனது நூறாவது பிறந்த தினத்தின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்

01. அற்புதமாம் சிருஷ்டிதனை அவனிக்கீயும்
அன்பிளைத்த பெட்டகமே தாய்மையாகும்
ஒப்புயர்வற்ற அந்த உறவு உயிரின்
உற்பத்தி அத்தனைக்கும் உரிமை சொல்லும்
அப்பிறப்பை அகிலமெல்லாம் அன்னை என்று
அளப்பரிய உறவு சொல்லி ஆராதிக்கும்
பெட்டமைந்த பித்துடைய பெண் தெய்வத்தை
பேணுவதே பிள்ளை செய்யும் பெரிய சேவை.

02. கருவறையில் கருக்கொண்ட காலம் தொட்டு
கருத்தெல்லாம் வளர்ச்சியிலே கண்ணாய் நிற்பாள்
தெரியாமல் உதரத்துள் வளரும் எந்தன்
தெரிசனத்தைத் தினைப்போதும் மறக்க மாட்டாள்
திருவாசக நம் வரவை சிந்தை கூர்ந்து
தெரியாத வேதனையை உடலில் தாங்கி
உருவாகத் திங்கள் பத்தை எமக்காய் ஈய்ந்து
உயிர் தந்த அன்னைக் கோர் உவமை இல்லை.

03. ஐயிரண்டு மாதமதில் அவளும் நாமும்
அறியாத வேதனையில் அவலப்பட்டு
உய்யவே உதிரத்தை உணவாய்த் தந்து
உருவாகி நாம் உலகைக் காண வேண்டி
மெய்யிரண்டும் வேதனையால் வெந்து நொந்து
விரிந்த நிலம் தன்னில் நாம் வீழ்ந்து கத்த
பையவே எம்மைப்பார்த்து புன்னகைத்தாள்
பாசத்தின் பிரசவமாய் பரிணமித்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. ஈரைந்து மாதமாய் பட்ட இன்னல்
எல்லாமே மறந்திருப்பாள் வதனம் நோக்கி
பேரன்பாய் எமை அணைத்துப் பிரியமாக
பிதுக்கித்தன் உதிரத்தை பாலாய் மாற்றி
வீரத்தை அன்புகுன்றா பண்பினோடு
வெற்றி தரும் வித்தகத்தை அதனுள் சேர்த்து
நேரமது தவறாமல் அன்பாய் ஊட்டி
நினைந்து காத்திடும் உயிர்தான் தாய்மையாகும்.

05. மழலையாய் நாம் சொன்னமொழிகள் யாவும்
மனமதனில் சித்திரமாய் தீட்டி வைப்பாள்
பிழைகண்ட போது எமைப் பிரியமாக
பிஞ்சுமனம் நோகாமல் கெஞ்சி நிற்பாள்
குழைவோடு எம்மையுடன் கூட்டிச்சென்று
கோவில் குளம்காட்டியெம்மைக் குளிர வைப்பாள்
சளைக்காமல் தரணிதனில் தரமாய் வாழ
தாய் என்பாள் தன் சுகத்தைத் தானம் செய்வாள்.

06. ஓயாமல் உயர்வுக்காய் உழைத்திடுவாள்
ஒரு போதும் எம் பசியைப் பொறுக்கமாட்டாள்
தூய்மையாய் எம்மை எல்லாம் சுத்தம் செய்யும்
துடைப்பம் போல் நிற்பவளும் நீயே அம்மா
பேயரென்று எம்மைப் பிறர் பேசி விட்டால்
பித்தாகிப் பேதையவள் செத்தே போவாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்வாக எம்மைத்தினம் உயர்த்திக்காட்டும்
உயிரான கோபுரமும் தாயே ஆவாள்.

07. தாலாட்டுப் பண்பாடித் தூங்க வைப்பாள்
சரித்திரக் கதைகள் சொல்லி பசியைத் தீர்ப்பாள்
நூலாக நோன்பிருந்து நோயில் காக்க
நுடங்காமல் பிரார்த்திப்பாள் பெருமான் பாதம்
காலாலே நாம் தத்தி நடந்த போது
கையிரண்டில் அள்ளி எம்மைக் கொஞ்சி நிற்பாள்
பாலகராய் எம்மைத் தன் இடுப்பில் தாங்கி
பள்ளிவரை அன்னையவள் கொண்டு சேர்ப்பாள்.

08. பிள்ளையது சிறு துயரம் பொறுக்க மாட்டாள்
பெருந்துயரம் தனக்கு வரில் பேசமாட்டாள்
கள்ளமில்லா உள்ளமதில் எம்மைத் தாங்கி
காலமெல்லாம் சுமைதாங்கி ஆக நிற்பாள்
உள்ளமதில் பிள்ளைகளின் உயர்வு தன்னை
உள்கியே உணர்வெல்லாம் உருகி நிற்பாள்
பிள்ளைமனம் கொண்ட அன்னை பேசும் வார்த்தை
பிரபஞ்சம் அதிரவைக்கும் பெருமந்திரம்.

09. முகத்தோடு முகம் வைத்து முத்தம் தந்து
மூடிவைப்பாள் முந்தானைச் சேலை தன்னுள்
சுகமான கதை கேட்டு சொக்க வைத்து
சுதந்தரமாய் எம் சிரிப்பில் சொர்க்கம் காண்பாள்
மகவாக மார்போடு எமை அணைத்து
மனத்தோடு மனம் சேர மாற்றிக் கொள்வாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுகமாகிப் போனாலும் தாய்க்கும் சேய்க்கும்
தூரமது சூக்குமமே என்று சொல்லும்.

10.தெய்வமததை நாம் காண்போம் கருவறைக்குள்
கருவறையைத் தாய் சுமக்கும் தெய்வமாவாள்
வையகத்துள் வாழ்வாங்கு வாழும் பண்பை
வழங்குகின்ற நடமாடும் தெய்வமாவாள்
உய்விக்க உலகத்தில் உயிர்ப்பாய் நின்று
உலாவிடுவாள் எம்மிடையே தெய்வமாக
பொய்மிக்க பூவுலகின் மெய்த் தெய்வத்தை
புரிந்து கொண்டு போற்றிடுவோம் அன்னை என்று.

**அன்பகலாத பிள்ளைகள்**
திருமதி ஏ.செல்வமலர்
திருமதி.இ.ஞானமலர்
திருமதி.வி.வசந்தமலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பூரணவாழ்வின் பூரணத்துவம்

நம்முன்னேவாழ்ந்த இரும்புப் பெண்மணி அம்மம்மா எம்முடன் இல்லை. ஆனால் அவர் வாழ்வியலை கற்பித்துச சென்றுள்ளார். நாம் அவரின் பேரர்கள் என்பதிலே உவகைகொள்கின்றோம்.

அம்மம்மா அமைதியாக தனக்கென தனிப்பாதை அமைத்து தனித்துவமாக வாழ்ந்தவர். அவர் தன் வாழ்நாளில் யார் வாயிலையும் தன் பொருட்டுமிதித்ததில்லை. நாம் அறிய நாகம்மாளின் வாசலுக்கும் போனதில்லை. அவர் நாத்திகரில்லை. அம்பாள் தன் வாயலில் வரும் போது அர்ச்சித்து மகிழ்வார். அடிக்கடி அம்மாளே என்றும் சொல்லியாறுவர். அவர் தன் சீரியவாழ்வில் அம்பிகையை பக்தியுடன் பார்த்தாரே தவிர பயத்துடன் பார்க்கவில்லை.

வாழ்வின் துன்பியலானதருணங்களிலும் நிமிர்ந்து நின்று அடுத்த கருமம் என்ன என்று பார்த்தாரே தவிர சோர்ந்திடவில்லை. இதனால் தானோ என்னமோ எப்பிணியும் இன்றி நூற்றாண்டைக் கடந்தார். தாத்தா இடைவழியில் விட்டுச் சென்ற கடமைகளை பொறுப்பேற்று அதனை நிறைவேற்ற விவசாயம் இவரின் கரம் தொட்ட விதைகள் அவருக்குபொன் கொடுத்தன. அதனைக் கொண்டு மனைகள் கட்டி மக்களை வாழ்வித்தார்.

ஆளுமைஉருவாக்கப்படமுடியாதது. அதுபிறப்பிலேயே இருக்கவேண்டும் என்னும் வாக்கிற்கமைய அம்மம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமையை தன்னகத்தே கொண்டிருந்தவர். சுத்தம் பேணினர். முத்து என்று பேரர்கள் செல்லமாக விழிக்க அவரின் அகமும் முகமும் ஒளிரும். முத்துஆச்சிஎன்றுசுற்றம் அழைக்க, புன்முறுவல் பூக்கும் அவர் தம் வதனம். அவர் தம் வாழ்வில் எவரையும் புறம் பேசியதில்லை. அதனால் தான் அகமும் புறமும் தூய்மையாய் இருந்தது.

இம்மானுட வாழ்வை பூரணமாகவாழ்ந்து அம்பிகையின் பாதக்கமலமடைந்த அம்மம்மாவின் ஆத்மா எம் வாழ்வின் ஒவ்வொரு கணங்களும் எமக்கு வழிகாட்டி அரவணைத்துச் செல்லும் என்பது திண்ணம்.

ஓம் சாந்தி!!!

பிரிவுத் துயரில்
பேரர்கள், பூட்டப்பிள்ளைகள்,
சார்பாக
ஏகாம்பரநாதன் சுதாகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புக்கு இனிய ஆச்சியே போய்வா!

## திருமதி. செல்லம்மாகுலசேகரம்

மணிபல் லவத்தாய் மடியிற் பிறந்து
மாண்புறுகுலசேகரங்கைப் பிடித்து
செல்வமும் ஞானமும் வசந்தமுஞ் சேர
சீரும் சிறப்புமாய் வாழ்ந்தவர் ஆச்சி!

காத்தார் கூட்டக் கனியொன்றுவீழ்ந்தது
நீத்தார் பட்டியல் நிறைவுபெற்றது
நூற்றியோர் வயது தாண்டியஆச்சி
நேற்றுடன் வாழ்வை நிறைவுறச் செய்தார்!

நோயினால் சிலநாள் நுடங்கிக் கிடந்தும்
ஆயிரம் பிறைகள் கண்டமுத் தாச்சி
சாவினில் நின்று சரித்திரம் படைத்தார்
சாந்திஅடைவோம்! சந்ததிவாழ்க!

ஆச்சிஎன்று அழைத்திடும் போதிலே
அகமிகமகிழ்ந்து கரங்களைக் கூப்பிடும்
ஆச்சியை இனிமேல் யாரிடம் காண்போம்
அன்புக் கினியாய் அமைதிகொள் போய்வா!

எல்லோர் வாழ்விலும் மரணம் என்பது
இயற்கையின் நியதி எவரிதை வெல்வார்
செல்லம் மாவெனுஞ் சீரியநாமம்
எல்லோர் அனைத்திலும் என்றும் நிலைக்கும்!

செல்லம் மாவெனும் நாமந் தாங்கியே
சீரும் சிறப்புமாய் வாழ்ந்தமுத்தாச்சி
அகவைநூற்றொன்றைத் தாண்டியவேளையில்
அம்பாள் திருவடி அடைந்தார் சாந்தி!

பிரிவுத் துயருடன் பேரன்
கா.பொ.இ குலசிங்கம் குடும்பம்
நயினாதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதயம் நெகிழ்ந்த விழிநீர் அஞ்சலி

அளவிட முடியா அன்பு
ஆழம் புரிந்திடா நட்பு
இன்முகம் காட்டிய உள்ளம்
ஈதலே மகிழ்ச்சியின் எல்லை !

இவை அனைத்துமே உந்தன் முழுமை
உம் உறவாக இருப்பவர்களுக்கென்று
நீர் முகவரி தேடிய தில்லை
மறைந்தும் கனவிற் கூட
நீங்கள் தீங்கு நினைத்த தில்லை !

பழமைக்கு புதுமை சேர்த்தீர்
குடும்பங்களைச் செழிக்கச் செய்தீர்
வளமைகள் அறிந்து வாழ்ந்தீர்
வாழ வழி உணர்ந்து சொன்னீர் !

படைத்தவன் அழைத்ததால் விடைபெற்றுள்ளீர்
நீங்கா நினைவுடன் - இங்கே மீளாத் துயருடன் நாங்கள்
ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்

நயினை எஸ் - சோமேஸ்வரபிள்ளை
குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையரின் அன்பு

ஆகாயத்திற்கும் பூமிக்கும் இடையில் பெரிய ஆலயங்களை கட்டியவர்கள் ஆண்கள். ஆகமங்களை எழுதியவர்கள் ஆண்கள். ஆர்ப்பாட்டமாகத் திருவிழாக்களை நடத்தி வாகனங்களில் சுவாமியை வைத்து வலம் வருகின்ற பலம் உடையவர்கள் ஆண்கள். அர்ச்சகர்கள் ஆண்கள். தர்மகர்த்தாக்கள் ஆண்கள். அப்படியானால் பக்தி வளர்க்கும் பக்திமான்கள் ஆண்களாகத் தானே இருக்க வேண்டும் என்று கேட்டால் அது உண்மையாகாது.

ஏனெனில் செய்பவர்கள் ஆண்கள். செய்விப்பவர்கள் பெண்கள். மிகப்பெரிய ஆலயத்தைக் கட்டியவன் இராஜராஜசோழன். ஆனால் அவனை அப்படிக் கட்டவைத்தவர் அவனது சகோதரி. சைவம் வாழப் பாடுபட்ட சமயத் தலைவர் திருநாவுக்கரசர். அவரைச் சைவ சமயத்துக்கு அழைத்து வந்தவர் அவரது சகோதரி திலகவதி.

ஊர் ஊராகப் போய் முருகன் திருப்புகழ் பாடியவர் அருணகிரிநாதர்.கடவுளை மறந்து திரிந்த அருணகிரியை கடவுள் பக்தனாக மனம் மாற்றியவர் அவரது சகோதரி. ஹிந்தியில் இராமகாவியம் பாடிய பக்திமான் துளசிதாஸர். நிலைதடுமாறித் திரிந்த அவரைத் திருத்தி ஞானியாக்கிப் பாடவைத்தவர் அவரது மனைவியார்.

எப்போதும் செய்பவர்களை விட செய்விப்பவர்கள் தான் பலசாலிகள். அவர்கள் எதைச் செய்கிறார்களோ அதைத்தான் இன்னொருவராலும் செய்விக்கிறார்கள். அதுமட்டுமல்ல செய்பவர்கள் ஒரு மடங்கு நன்மை செய்விப்பவர்கள் பலரை ஆளாக்கி பல மடங்கு நன்மை செய்ய முடியும்

ஒரு சுதந்திரப் போராட்டத் தியாகி பெரியார். ஆனால் அவரை அப்படி உருவாக்கிய மகாத்மா மிகப்பெரியவர் . நீதித்துறையில் சட்டத்தின் பார்வையில் தவறு செய்பவர்களை விட செய்யத் தூண்டுபவர்களே கடுமையான தண்டனைக்குரியவர்கள் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தின் பார்வையில் ஒருவர் தவறுதலாகப் பேசினால் பேசுகின்ற நாக்கை வெட்டுவேன்! குரல்வளையை நசுக்குவேன் என்று எவரும் சொல்வதில்லை. பல்லை உடைப்பேன் என்று தான் கூறுவார்கள். ஏன் தெரியுமா? குரல் வளை பேசினாலும் புரியாது. பல்லின் ஒத்துழைப்பால்தான் பிரகடனப்படுத்த முடியும். எனவே தூண்டுபவர்கள் பிரதானமானவர்கள். திருநாவுக்கரசரை சைவ சமயத்துக்குத் திருப்பிய திலகவதியாரை தூண்டு தவ விளக்கனையர் " என்று பாடுகிறார். சேக்கிழார்

இந்து சாம்ராச்சியத்தை நிறுவியவர் வீர சிவாஜி. அவரை அப்படி நிறுவ வைத்தவர் அன்னை ஜீஜாபாய். கொப்பும் கிளையுமாக பூவும் இலையுமாகக் காயும் கனியுமாக மரம் நிற்கும். ஆனால் வெளியே தெரியாத வேர்கள்தான். அந்த மரத்தை அப்படியே நிற்கவைக்கின்றன. அதனால் தான் பெண்களை மனையறத்தின் வேர் என்று பெரியபுராணம் கூறுகின்றது.

திருநீலநக்கநாயனார் என்ற பக்தர் ஆசார அகம பக்தி செய்யும் பெரியவர். அவர் சிவபூசை செய்யும்போது சிவலிங்கத்தின் தலைமீது சிலந்தி ஒன்று விழுந்துவிட்டது நாயனாருடைய மனைவி வாயினாலே ஊதி சிலந்தியை அகற்றிவிட்டார். ஒரு குழந்தையைத் தாய் பாதுகாப்பது மாதிரியே சிவலிங்கத்தைப் பாதுகாத்துவிட்டார். ஆனால் ஆசாரமான அவரது கணவருக்கு எரிச்சல் வந்துவிட்டது. "வாய் எச்சிலை ஊதி பெருமானைப் பாழாக்கி விட்டாளே" என்று ஆத்திரப்பட்டு மனைவியை வீட்டை விட்டு வெளியேற்றிவிட்டார். இரவு என்று கூட இரக்க மில்லாமல் மனைவியை வெளியேவிட்டு கதவைத் தாழ் போட்டுத் தூங்கிவிட்டார் நாயனார்.

இரவு உறக்கத்தில் கனவில் சிவபெருமான் வந்தார் உடம்பெல்லாம் சிலந்திவிஷம் பட்ட கொப்பளங்கள் ஆனால் சில இடங்களில் மட்டும் கொப்புளங்கள் இல்லை நாயனார் பதறியவாறு கதறி எழுந்தார் இறைவன். " திருநீலநக்கா.. நான் இந்த கொப்புளங்களால் துன்புறுகிறேன் . ஆனால் உன் மனைவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊதிய இடங்களில் மட்டும் அவளது அன்பு மயமான எச்சில் பட்டு கொப்புளங்கள் எழவில்லை. எங்கெல்லாம் எச்சில் படவில்லையோ அங்கெல்லாம் எரிகிறது" என்றார்.

எம்பெருமான் எச்சிலைப் பார்க்கவில்லை பெண்மை தாயன்பு மயமானது என்பதையே கொண்டாடுகிறார். ஆண்களின் ஆசார ஆகமங்களை விட அன்னையரின் அன்புதான் ஆண்டவனுக்கே விருப்பம்.

- சுகி சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆன்மீக தத்துவம்

ஜென்மம் நிறைந்தது சென்றவர் வாழ்க
சிந்தை கலங்கிட வந்தவர் வாழ்க
நீரில் மிதந்திடும் கண்களும் காய்க
நிம்மதி நிம்மதி...இவ்விடம் சூழ்க!

ஜனனமும் பூமியில் புதியது இல்லை
மரணத்தைப் போல் ஒரு பழையதும் இல்லை
இரண்டும் இல்லாவிடில் இயற்கையும் இல்லை
இயற்கையின் ஆணைதான் ஞானத்தின் எல்லை

பாசம் உலாவிய கண்களும் எங்கே?
பாய்ந்து துளாவிய கைகளும் எங்கே?
தேசம் அளாவிய கால்களும் எங்கே?
தீ உண்டதென்றது சாம்பலும் இங்கே

கண்ணில் தெரிந்தது காற்றுடன் போக
மண்ணில் பிறந்தது மண்ணுடன் சேர்க
எலும்பு சதைகொண்ட உருவங்கள் போக
எச்சங்களால் அந்த இன்னுயிர் வாழ்க!

பிறப்பு இல்லாமலே நாளொன்றும் இல்லை
இறப்பு இல்லாமலும் நாளொன்றும் இல்லை
நேசத்தினால் வரும் நினைவுகள் தொல்லை
மறதியைப் போல் ஒருமா மருந்தில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல்தொடும் ஆறுகள் கலங்குவதில்லை
தரைதொடும் தாரைகள் அழுவதும் இல்லை
நதி மழை போன்றதே விதியென்று கண்டும்
மதிகொண்ட மானுடர் மயங்குவதென்ன!

மரணத்தினால் சில கோபங்கள் தீரும்
மரணத்தினால் சில சாபங்கள் தீரும்
வேதம் சொல்லாததை மரணங்கள் கூறும்
விதை ஒன்று வீழ்ந்திட செடி வந்து சேரும் !

பூமிக்கு நாம் ஒரு யாத்திரை வந்தோம்
யாத்திரை தீரும் முன் நித்திரை கொண்டோம்
நித்திரை போவது நியதி என்றாலும்
யாத்திரை என்பது தொடர் கதையாகும் !

தென்றலின் பூங்கரம் தீண்டிடும் போதும்
சூரியக் கீற்றொளி தோன்றிடும் போதும்
மழலையின் தேன்மொழி செவியுறும் போதும்
மாண்டவர் எம்முடன் வாழ்ந்திடக் கூடும் !

மாண்டவர் சுவாசங்கள் காற்றுடன் சேர்க!
தூயவர் கண்ணொளி சூரியன் சேர்க!
பூதங்கள் ஐந்திலும் பொன்னுடல் சேர்க!
போனவர் புண்ணியம் எம்முடன் சேர்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயினைப் போற்றும் தத்தவ முத்துக்கள்

01. ஒரு நல்ல தாய் நூறு ஆசிரியர்களுக்குச் சமமானவள்

02. தாயை யாருடனும் ஒப்பிடலாகாது அவள் ஒப்பற்றவள்

03. தந்தையின் நற்குணம் மலையைவிட உயரமானது. தாயின் நற்குணம் கடலை விட ஆழமானது

04. எத்தகைய தவறையும் மன்னிக்கும் நீதிமன்றம் ஒன்று உண்டென்றால் அது தாயின் இதயமே

05. நீங்கள் உங்கள் தாய்க்குக்கூட அடங்காவிட்டால் உங்களுக்காகச் சிறைக்கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கும்.

06. தாயின் இதயம் குழந்தைகளின் பள்ளிக்கூடம்

07. எந்தப் பதவியையும் நாம் வகிக்க முடியும் ஆனால் தாயின் இடத்தை யாராலும் வகிக்க முடியாது.

08. ஒரு அன்னை பத்துக் குழந்தைகளைக் காப்பற்ற முன் வருகிறாள் ஆனால் பத்துக் குழந்தைகளும் ஒரு அன்னையைக் காப்பற்ற முன் வருவதில்லை

09. தாசியோடு செல்பவனையும் கூட தன் மகன் என்று உரிமையோடு சொல்லும் உயர்ந்த உள்ளம் ஒரு தாயிடம் தான் உண்டு

10. ஒருவர் தன் இரக்கத்தையே மற்றவருக்குக் கொடுப்பாரென்றால் அவர் தாய் தான்

11. ஒரு குழந்தைக்கு தாய் இருக்குமிடந்தான் சொர்க்கம்

12. தாயைப் பார்த்து மகளை மணஞ்செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. தாயிலே கெட்டவளுமில்லை. சாவிலே நல்லதுமில்லை

14. தந்தை இல்லாக் குழந்தை பாதி அநாதை. தாயிலாக் குழந்தை முழு அநாதை

15. தந்தையின் பாசம் சவக்குழி வரை. தாயின் பாசம் சிரஞ்சீவியானது

16. அறிவின் தந்தை ஞாபகசக்தி எனில் அதன் தாய் தான் சிந்தனை

17. தாயை அளவிடுவதில் - மனிதர்கள் கவனமாய் இருக்க வேண்டும் ஏனெனில் ஆண்டவன் அவர்கள் கண்ணீரை எண்ணிப் பார்க்கிறான்

18. உன் அன்பை மனைவியிடம் காட்டு உன் இரகசியத்தை தாயிடம் சொல்

19. தாயின் இதயம் என்றும் வாடாத மலர்ந்த மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிப்பேரரசு வைரமுத்து

மரங்கள் இல்லையேல்
காற்றை எங்கேபோய்ச்
சலவை செய்வது ?

மரங்கள் இல்லையேல்
மழைக்காக எங்கேபோய்
மனுச் செய்வது ?

மரங்கள் இல்லையேல்
மண்ணின் மடிக்குள்ளே
ஏதப்பா ஏரி?

பறவைகளும் விலங்குகளும்
மரம் தரும்உத்தரவாதம்
மனிதர் நாம் தருவோமா ?

உண்ணக்கனி
ஒதுங்க நிழல்
உடலுக்கு மருந்து
உணர்வுக்கு விருந்து.

அடையக்குடில்
அடைக்கக் கதவு
அழகு வேலி
ஆடத்தூளி.

தடவத் தைலம்
தாளிக்க எண்ணெய்
எழுதக் காகிதம்
எரிக்க விறகு.

மரந்தான்
மரந்தான்
எல்லாம் மரந்தான்.

மறந்தான்
மறந்தான்
மனிதன் மறந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள்

எறும்பின் சுறுசுறுப்பும்
எருதின் உழைப்பும்
கழுகின் பார்வையும்
கழுதையின் பொறுமையும்
காகத்தின் கூட்டுறவும்
கிளியின் மொழியும்
குயிலின் இனிமையும்
மயிலின் அழகும்
சிங்கத்தின் நடையும்
சிறுத்தையின் வேகமும்
புலியின் வீரமும்
பூனையின் பதுமையும்
நரியின் தந்திரமும்
நாயின் நன்றியுணர்வும்
யானையின் அறிவும்
தேரையின் பாய்ச்சலும்
தேனியின் சேமிப்பும்
மானின் வாழ்வும்
மானிடர் வாழ்வில்
மாட்சி பெற உதவும் காட்சிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தத்துவ முத்துக்கள்

❖ பெற்றோருக்கு நல்ல பிள்ளை, கடவுளின் செல்லப்பிள்ளை

❖ கண்ணுக்குத் தெரியாத கடவுளுக்காக ஏங்குவதை விட கண்ணெதிரே வாழும் தெய்வீகமான தாயை வணங்குங்கள், தாயின் அன்பு கிடைத்தால் இறையருள் பூரணமாகக் கிடைக்கும்.

- சாயி

❖ குட்டிப்பூனையின் மென்மையான ஒலிகேட்டு ஓடிவரும் தாய்ப் பூனையோடு, பக்தனின் இதயத்தில் இருந்து எழும் குரலைக் கேட்ட மாத்திரத்தில் கடவுள் ஓடி வந்து விடுவார்

- சாயி

❖ பண ஆசையால் அலையும் கருமிபோல கடவுள் மீது ஆசை கொண்டு அலைந்தால் அவனருள் கிடைக்கும்

- ராமகிருஷ்ணர்

❖ காலம் முழுவதும் உன்னை வயிற்றிலும் மடியிலும், தோளிலும், மார்பிலும் சுமப்பவள் தாய் மட்டுமே அவளை என்றும் மனதில் சுமப்போம்

❖ உலகில் தேடித்தேடி அலைந்தாலும் மீண்டும் அமரமுடியாத சிம்மாசனம் தாயின் கருவறை

- பொன்மொழி

❖ சகமனிதருக்கு உதவுவது ஆண்டவனுக்கு உதவுவதாகும். எனவே எச் சமயத்தாரும் ஏழைகளுக்கு உதவத் தயங்கக் கூடாது.

- அன்னைதிரேசா

❖ முதியவர் ஒருவருக்கு அளிக்கப்படும் கௌரவம் கடவுளுக்குச் செய்யப்படும் மரியாதையாகும். முதியவர்களுக்கு அவர்களது வயோதிபத்தின் காரணமாக மதிப்பளிக்கும் ஒவ்வொரு இளைஞருக்கும் அவர்களது வயோதிபப் பருவத்தில் மரியாதை செய்பவர்களை கடவுள் நியமிக்கிறார்

- ராமகிருஷ்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ உங்கள் முதிய பெற்றோர் கண்ணீர் சிந்திட நீங்கள் அனுமதிக்கக் கூடாது மாறாக நீங்கள் அவர்களை மகிழ்ச்சி அடையச் செய்தால் நீங்களும் மகழ்ச்சியுடன் இருக்கலாம்

- சாயி

❖ யார் தாயாருடன் அன்பு நோக்கைப் பெற முடியவில்லையோ, அவரால் தெய்வத்தின் அருட் பார்வையைப் பெறமுடியாது. கடவுளின் அன்பையும் பெற முடியாது.

- கிருஷ்ணபிரான்

❖ உன் அழுகையைத் துடைத்த விரல்களையும், ஆபத்தில் உதவிய கைகளையும் ஒரு நாளும் மறவாதே

- பொன்மொழி

❖ சூழ் நிலைகளைக் காரணம் கூறி ஒரு வித மலராக மலரக் கூடிய விதை வேறு ஒரு வித மலராக மலர்வதில்லை அவ்விதமே நேர்மையானவர்களும் சூழ்நிலைகள் காரணமாக நேர்மை தவறுவதில்லை

- ராமகிருஷ்ணன்

❖ பொய் சொல்லித் தப்பித்து விடாதே உண்மை சொல்லி மாட்டிக் கொள். பொய் உன்னை வாழ விடாது, உண்மை உன்னைச் சாக விடாது.

- பொன்மொழி

❖ ஏழைக்குக் கொடுப்பவன் கடவுளுக்குக் கடனாகக் கொடுக்கிறான்

- பொன்மொழி

❖ மனித வாழ்க்கையில் மூன்று விஷயங்கள் முக்கியமானவை

- கடவுளை மறக்கக் கூடாது
- உலகத்தை நம்பக் கூடாது
- மரணத்திற்கு அஞ்சக் கூடாது

- சாரதி

❖ உன் மனம் வலிக்கும் போது சிரி
பிறர் மனம் வலிக்கும் போது சிரிக்க வை

- அப்துல்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ காந்தியின் 9 வது வயதில் அவரது தாயார் அவருக்கு ஓர் அறிவுரை வழங்கினார்.

மகனே துன்பத்தில் துவளும் யாராவது ஒருவரின் வாழ்வில் நீ ஏதேனும் ஒரு மாற்றத்தை உருவாக்கி அவரைத் துன்பத்தில் இருந்து மீட்டெடுத்து முன்னேற்றப் பாதையில் கொண்டு சென்றால் நீ பிறந்த பலன் உன்னை முற்றிலும் வந்தடையும். கடவுள் எப்போதும் உனக்கு அருள்வார்"

கோபம் என்பது கொடிய அமிலம். அது விழும் இடத்தைவிட, இருக்கும் இடமே பெரிது நாசம்

- கிளெண்டல்

❖ அதிகாலை நீ நினைத்த நேரத்தில் எழுந்து விட்டால் தோல்விகள் உன்னைக் கண்டு ஒதுங்கிக் கொள்ளும்

- அப்துல் கலாம்

❖ விசிறியை அசைக்காமல் காற்று வராது. வியர்வை சிந்தாமல் உயர்வு வராது

- ஜப்பான்

❖ ஆற்றுநீர் வாதம் போக்கும்- அருவிநீர் பித்தம் போக்கும், சேற்று நீர் இரண்டும் போக்கும்

**தொகுப்பு - திருமதி ஏ.செல்வமலர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவெழா நிலையில் நன்றி நவில்கின்றோம்.

எங்கள் வாழ்வின் வழிகாட்டியாய், ஒளியூட்டியாய் திகழ்ந்த எமது குடும்பத் தலைவி குலசேகரம் செல்லம்மா அவர்கள் முதுமையின் முடிவாய் சிலகாலம் நோயுற்றுப் படுக்கையில் நொந்து கிடக்கையில் பணிவிடைகள் புரிந்த அன்புள்ளங்கள் அனைவருக்கும், அழைத்தவுடன் அகத்தே வந்து சுக நல மேம்பாட்டிற்கு துணையாய் இருந்த எமது குடும்ப வைத்திய கலாநிதிகள் திரு.திருமதி சிவகோணேசன் தாரணி தம்பதிகட்கும், நூற்றியொரு அகவை கடந்து ஆயிரத்துக்கு மேல் பிறைகண்டு 24.08.2020 பிரம்ம முகூர்த்த வேளையில் இறைபதம் எய்துங்கால் உடனிருந்து உதவிய உறவினர்களுக்கும், பிரிவுத் துயரை சிலநொடிப் பொழுதில் இணைய வழியில் ஏற்படுத்திய உறவுப்பாலம் நயினை மா. செந்தில்குமரன் அவர்களுக்கும், இலங்கையின் பல பாகங்களில் இருந்து வருகை தந்தும் உள்நாட்டிலும் வெளிநாடுகளில் இருந்தும் தொலைபேசி,தபால் மூலமாக தொடர்பு கொண்டு துயர் பகிர்ந்த அனைவருக்கும், மேலான ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் ஈடுபட்ட ஆன்மீகச் சுடர் – ரிஷி தொண்டு நாத சுவாமிகட்கும், இறுதிக்கிரியைகள் நிறைவுறும் வரையிலும் இன்று வரையும் வேளை தவறாது தேநீர், சிற்றுண்டி, உணவு அளித்து உதவிய அன்பிற்கினிய அயலவர்கள், உறவினர் கள் அனைவருக்கும் இறுதிக் கிரியைகள், சடங்கு, அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொண்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளில் ஈடுபட்ட அனைவருக்கும், சகல கிரியைகளையும் முறையே நிறைவேற்றிய அந்தண சிவாச்சாரியார்கள் அனைவருக்கும், கண்ணீர் அஞ்சலிப்பிரசுரங்கள், துயர்பகிர்வு பதாகை வெளியிட்ட அனைவருக்கும் நினைவுமலர், அருட்பாமாலை ஆகியவற்றிற்கு ஆக்கங்கள் தந்துதவியவர்கள், குறுகிய காலத்தில் பிழையற, அழகுற தொகுத்தவர், அன்பாய் அழகாய் அச்சிட்டு உதவிய வரன் அச்சகத்தினர் மற்றும் எல்லா வழிகளிலும் உதவிய அனைத்து அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


"பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்
நன்மை கடலிற் பெரிது "

இங்ஙனம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குலக்கொடியில் பூத்த நறுமலர்கள்




♦ அமரரை குறிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமான வாழ்விற்கு

தூய்மையாக இருப்பதும்
மற்றவர்களிற்கு நன்மை
செய்வதும் தான் எல்லா
வழிபாடுகளினதும் சாரமாகும்.
தீமை செய்பவன் தனக்கும்
மற்றவர்களுக்கும் தீமை செய்கிறான்.
நன்மை செய்பவன் தனக்கும்
பிறர்க்கும் நன்மையே செய்கிறான்.
உடலும் உள்ளமும் தூய்மையின்றி
கோயிலுக்கு போவதும் இறைவனை
வழிபடுவதும் பயனற்றதாகும்.
நேர்மையுடனும் தைரியமாகவும்
பக்தி சிரத்தையுடனும் வாழ்ந்தால்
இறைவனை அடைவது உறுதி

" நன்னெறியே இறைவணக்கம் "

- சுவாமி விவேகானந்தர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரன் பிறிண்டேர்ஸ், யாழ். 0779176840